உ

சிவமயம்.

இஃது

வங்காளம்

பெரியவீட்டுச்

சிங்காரமுருகேசர் பதிகம்.

வங்காளமாகிய கல்கத்தாவிலிருக்கும்
நாட்டுக்கோட்டை பெரியவீட்டு நகரத்தாரவர்கள்
வேண்டுகோளின்படி
அகத்தியான்பள்ளி
இராமசேடய்யரவர்கள் குமாரனும்
தேத்தாகுடி வடக்குசேத்தி முதல்தர ஆரம்பப் பாடசாலை
மானேஜருமாகிய

வயித்தியநாதசர்மா அவர்களால்

இயற்றப்பெற்று

ஷை நகரத்தாரவர்களால்

பிரசுரிக்கப்பெற்றது.

1922.

உ

சிவமயம்.

இஃது

வங்காளம்

பெரியவீட்டுச்

சிங்காரமுருகேசர் பதிகம்.

வங்காளமாகிய கல்கத்தாவிலிருக்கும்

நாட்டுக்கோட்டை பெரியவீட்டு நகரத்தாரவர்கள்

வேண்டுகோளின்படி

அகத்தியான்பள்ளி

இராமசேடய்யரவர்கள் குமாரனும்

தேத்தாகுடி வடக்குசேத்தி முதல்தர ஆரம்பப் பாடசாலை

மானேஜருமாகிய

வயித்தியநாதசர்மா அவர்களால்

இயற்றப்பெற்று

ஷை நகரத்தாரவர்களால்

பிரசுரிக்கப்பெற்றது.

1922.

உ

இஃது

சிறப்புப்பாயிரம்.

இராமநாதபுரம் ஜில்லா சிவகெங்கை சமஸ்தானம்
மழவாபுரியிலிருக்கும் மகா-ள-ஸ்ரீ சிதம்பர பாரதியார் அவர்கள்
குமாரன் இராமசாமி அய்யரவர்களால் இயற்றப்பெற்றது.

அறுசீராசிரிய விருத்தம்.

மாமணக்குந் தாமரையின் மலர்மணக்கும் வாவிபொழில்
வளவங்காள
மேமணக்கு நற்கடம்ப மேல்மணக்கும் வேலனருள்
மிகவே வேண்டி
வாய்மணக்குந் திருப்புகழின் மதுமணக்கும் பதிகமதை
வயித்திய நாதன்
நாமணக்கச் சொலக்கேட்டு நாமணக்கும் படியுயரு
நலமுற்றோமே.

இஃது

இப்புத்தகமியற்றிய வயித்தியநாத சர்மா அவர்கள்
மாணாக்கருளொருவரும்
தேத்தாகுடி முதல்தர ஆரம்பப்பாடசாலைத்
தமிழ்ப் பண்டிதருமாகிய ஷண்முகம் பிள்ளையால் இயற்றப்பெற்ற

அறுசீராசிரிய விருத்தம்.

கல்கத்தா சாமிநாதன் கண்டொருவங் காளச்சிங்
காரன் மேற்சீர்
மல்கத்தா ரணிபரவ வணங்கியெவ ருந்துதித்து
வாழ்த்த நித்தஞ்
சொல்கத்தா வொருபதிகந் தூயபுக ழொடுசிந்துந்
தோன்ற வென்று
நல்கத்தார் கடம்பற்கு நவின்றான் வைத் தியநாத
நாவல் லோனே.

இஃது

காப்பு

வெண்பா

கங்கா நதிக்கரையிற் காணுநக ராம்புகழ்கொள்
வங்காள மேவி வளமுறவாழ் சிங்கார
மாமுருகே சன்மேற்பா மாலைபதி கம்புகல
மாமரக தக்கரிமுன் வா.

நூல்

எழுசீராசிரியவிருத்தம்

சீருற்ற தங்கமயி லேருற்றி லங்குபுகழ்
சேரத் திகழ்ந்த முருகா
தெய்வானை வள்ளியிரு மெய்பாக முள்ளியுறு
செய்கையது கொண்ட முருகா
சூருற்ற திறன்முழுதும் வேரற்றி டச்செய்து
சுரர்குலங் காத்த முருகா
துன்றுபடை வீடெனுங் குன்றுதொறு மாடலைத்
தோன்றவே செய்த முருகா
பேருற்ற பிரனெற்றி நேருற்ற விழிவழி
பிறந்துவாழ் வுற்ற முருகா
பெரியதமி ழருமையின தரிமையென வுலகுபுகழ்
பெறுமுயர்வு பெற்ற முருகா
தேருற்ற புலவர்கவி யேருற்ற சந்தமொடு
செப்பத் தகுந்த முருகா
தெங்காரு வனமேவு வங்காள நகரேறு
சிங்கார முருகேச னே. (1)

கந்தமுரு காமாசி கந்தமுரு காமணமு
கந்தமுரு காவருக வோர்
கானமுரு காதினைக் கானமுரு காமலைக்
கானமுரு காவர வுமை
தந்தமுரு காவுலகு யர்ந்தமுரு காவெனது
சந்தமுரு காதங்க வேல்
தாங்குமுரு காசுரர்கள் தாங்குமுரு காவெனைத்
தாங்குமுரு காபூவிலை
வந்தமுரு காகவியு வந்தமுரு காவடிசி
வந்தமுரு காதங்க மா
மயில்கொண்முரு காகூரு ளயில்கொண்முருகா செந்தில்
வளருமுரு காவெனச்சீர்
செந்தமிழி னாற்றுதிதி னம்புரியு மெற்குனது
செங்கருணை தந்தருள்வையே
தெங்காரு வனமேவு வங்காள நகரேறு
சிங்கார முருகேசனே. (2)

கங்கா நதிப்பெருக் கங்காணு மோர்பெருங்
கரைமேவி வாழு நகரம்
காளிகா தேவியின தாளுகையி லேமிகுங்
காவலது கொண்ட நகரம்
பங்காளு மாபதிபு றங்காணு மம்மையொடு
பரவிவாழ் கின்ற நகரம்
பாரதினி லெவையுமொர பாரமாக் கொள்வியா
பாரமது பூண்ட நகரம்
மங்காத செல்வநிறை யுங்காத லூறுமொர்தன
வணிகர்கடை வாழு நகரம்
வங்கமது றும்பெருத ரங்கமது வீசுகடல்
வளைந்தழகு மேவு நகரம்
சிங்கார நகராகு மங்காளி கட்டிலுறை
செல்வமுரு காவந்த ருள்
தெங்காரு வனமேவு வங்காள நகரேறு
சிங்கார முருகேசனே. (3)

காசிவிசு வேசர்பிர காசமது றுங்கயை
கதாதர யோத்தி ராமர்
காணும்ப்ர யாகைஸ்ரீ வேணிமா தவர்தார
காதார கேஸ்வரர் நக
ரேசிவீஸ் வரரழகு வீசுகோ தாவரி
யிலங்குமர னம்மையொ டரு
ளீயுமரு மரகதவி நாயகரை யுந்தினமு
மேத்திவாழ் வுற்ற நகர
வாசிகளெ னப்புவியர் பேசுவணி கச்செட்டி
மார்தினம் வணங்கி வாழ்த்தி
மாபெருஞ் செல்வமொடு சீர்பெறுமொ ரானந்த
மருவகல் கத்தா வெனுந்
தேசிஞ லேதிகழு மேசினக ரிற்புகழ்
சிறக்கவாழ் வுற்ற முருகா
தென்காரு வனமேவு வங்காள நகரேறு
சிங்கார முருகேச னே. (4)

பங்குனிப் பூரத்தி லங்குபுக ழொடுதனஞ்
பதிவிட் டெழும்பி யேகிப்
பகர்காளி கட்டிஹூறு நகர்மா மடத்தன்று
பரிவுறவி ருந்துமறு நா
ளங்குத்தி ரத்திலகு கங்கையிற் றீர்த்தம
தனித்துமூன் றுகு நாளா
மத்தத்தி லேகாவ டிப்பால தபிடேக
மாகவதை யேற்று மறுநா
ளெங்கணும் விளங்கிடப் பொங்குதா னம்பல
வியற்றியவ ணன்றி ருந்து
மிலகுமைந் தாநாளி லலகில்புக ழோடவ
ணிருந்தெழுந் தருளியே தன்
றிங்களொளி வீசிப்பி றங்குமா லயமுறச்
சேருமுரு காகருணை செய்
தென்காரு வனமேவு வங்காள நகரேறு
சிங்கார முருகேசனே. (5)

திருவா வினங்குடி திருப்பரங் குன்றந்
திருத்தணிகை வயலூர் திருச்
செந்திலோடு கயிலைமலை கந்தமலை சாமிமலை
சென்னிமலை சோலைமலை சீர்
மருவார் மகாமேரு மலைதோகை மலை குன்றை
மலைபச்சை மலைவி ராலி
மலைமயில மலைபழநி மலைமயுர மலைகழுகு
மலையருணை மலைபழ முதிர்
தருவார் பொழிற்கண்டி யருகாய கதிர்காம
சயிலம்வே ளூர்கொடும ளூர்
தண்சிக்க லெட்டுகுடி யெண்கண்முத லாம்பல
தலந்தொறுமி ருந்து நாளுந்
திருவா ரருங்கருணை தருமாறு மாமுகா
சிவசுப்ர மண்ய முருகா
தெங்காரு வனமேவு வங்காள நகரேறு
சிங்கார முருகேச னே. (6

சரவண பவாசுகா சுரராது மகாசகா
சத்குருப ராசண்மு கா
தார்கடம் பாதமிழ்க் கோர்வரம் பரபரன்
றருசி லம்பா வேல வா
வரவணம தாருசுப் பிரமணிய செட்டிமயில்
வாகசே வற்கொடிய மான்
மருககாங் கேயவேண் முருகசெவ் வேள்கந்த
வாகுலே யாவிசா கா
குரவகலை யுணர்புலவ குழகவர னருள்குமர
குன்றெறிந் தவசு ரேசா
குககார்த்தி கேயவறு முககௌரி நந்தன
குறிஞ்சிவேந் தாவெனத் தஞ்
சிரவணக் கஞ்செய்து தினமனத் தார்பத்தி
செய்பவர்க் கருளு முருகா
தெங்காரு வனமேவு வங்காள நகரேறு
சிங்கார முருகேச னே. (7

ஆறுவத னங்களுமி ராறுநயனங் களுமி
ராறுகொள் கரங்களு மழ
காகமு மருங்கிலிரு பாகமுந் தெய்வானை
யம்மையொடு வள்ளி சேர
வேறுமயி லுஞ்சேவ லேறுகொ டியுங்கடம்
பேறுமுர முந்தெண்டும் வீ
றேறுமணி மகுடமுங் கூறுமடி யர்கள்பணிய
வின்பருட் டருமடிக ளும்
நீறுபூ சியவடிவும் வீறுமசு ரர்கள் குல
நிலையழிய வுஞ்செய்து கை
நின்றவே லுங்கருணை நின்றபார் வையுமோர்கொ
ணிறமுமென் விழிக ளாரத்
தேறுதல டைந்துநற் பேறுபெற வேயெனைச்
செய்வது மெந்த நாளோ
தெங்காரு வனமேவு வங்காள நகரேறு
சிங்கார முருகேச னே. (8)

அத்தனரு மகனேயொர் நத்தன்மரு மகனேயெ
மத்திமுக வற்கிளையனே
யம்பிகைய ருள்குமர நம்பிரம னொருசிர
மழுந்திடக் குட்டியவனே
நத்தவே சிறையதனுள் வைத்தபர னேசீர்கொ
ணவவீரர் முன்வந்த வா
நம்பானு முபதேச மம்பிரண வப்பொருளி
னயமறிய வோது குரவ
சத்தருண கிரிபுகழு ரைத்திடவ தற்குசரி
தாளமது போட்ட பரம
தமிழ்முனி தமிழ்க்கடலை யமுதென வயின்றிடத்
தந்தவோ ராசிரியனே.
சித்தமாரத் துதிய தெத்தினமு முன்னையே
செய்திடக் கருணை புரிவாய்
தெங்காரு வனமேவு வங்காள நகரேறு
சிங்கார முருகேச னே. (9)

மறைவாழி மறையோது பவர்வாழி நூல்களுணர்
மதிவாணர் வாழியாறு
மதம்வாழி யுன்னருட் பதம்வாழி நல்வழிகொள்
மங்கையர்க டமது கற்பி
னிறைவாழி யுலகுயரு மறம்வாழி தவசியர்க
ணிலை வாழி சைவாகம
நெறிவாழி யுனதருட் குறிவாழி நிலமீது
நின்றுவள ருற்ற சைவத்
துறைவாழி யுன்கோயின் முறைவாழி யுன்பதந்
தொழுபவர்கள் வாழி யுன்றன்
றூயகல்வி மூாக்கண்மூத லாயபல செலவுக
டுலங்கச்செய் நகர மகமைத்
திறைவாழி யிப்பதிக வுரைவாழி வாழநற்
றுங்கவரு டருவை முருகா
தெங்காரு வனமேவு வங்காள நகரேறு
சிங்கார முருகேச னே. (10)

முற்றுப்பெற்றது.

இஃது

சிங்கார முருகேசன் துதி.

திருப்புகழ் மெட்டு.

சந்தக்குழிப்பு.

தான தனனதந் தான தனனதந்
தான தனனதந்—தனதான.

கோல வடிவமுஞ் சேலை யழகுமங்
கோடு யர்முலையுங்—கனிவாயுங்
கோண லதுறுசங் கோடு வளையலுங்
கூறு மயலுறுங்—குணமேவு

மால விழியர்கண் பார்வை யதுகரும்
பாக மனமுவந்—துறவாடி
யாக மருவுசம் போக மதிலெனன்
பார வனுதினஞ்—சுழல்வேனே
பால விழியர்தம் பால வெனகமுன்
பால மரவிதம்—பெறவேயென்
பாவ மிரியவும் பேத மறவுமுன்
பாத மவைபணிந்—துயவேயான்
கால னணுகிடும் போதெ னதிருகண்
காண வருகுவந்—தருள்வாயே
காத லதுறவங் காளமருவுசிங்
கார முருகவெம்—பெருமாளே.

வேறு.

ஷ மெட்டு.

சந்தக்குழிப்பு,

தனதன தனனதந் தான தானன
தனதன தனனதந் தான தானன
தனதன தனனதந் தான தானன—தனதான.

அயில்விழி யவர்தருங் காத லாலென
தகமய லுறவுமுன் பாக வேயவ
ரணுகிட மனுதினந் தேடி யேதரு—மநுராக.
மதுமிக வுறவிதம் பேசி யேயவர்
பதமலர் தடவியும் பாய லேறியு
மணையதி லழகொடங் கேச லாபமு—முடனூர.
குயின்மொழி யவருடன் கூடி யூடியு
முறுகல விபலவுங் காண வேயவர்
குணமொடு பழகுசம் போக மேயொரு—சதமாவே.
குவலய மதினினைந் தேப னாளது
மகலசி தமுமிருந் தாலு னேரது
கொளுமடி மலர்பணிந் தேபராவிட—வெதுநாளோ.

மயிலினொ ருமுதுகின் மேலதேறியொ
ரயிலத ழுகுகரந் தாவவேசுரர்
மனமது மகிழவும் போய்மஹாபல—முறுசூரன்.
வலியழி வுதருசங் காரமாகிய
வடுதொழி லதுபுரிந் தேவுலாவிய
வனவெயி னர்மகடங் கோலனேயருள்—குமரேசா.
கயிலையி லுறுமரன் பாலனேமலை
மகடரு மொருகடம் பாரனேபர
கதியுற வருளுமம் பாதனேசிவ—குருநாதா.
கடலத னுறுவங் காள் மாநக
ரதுபுக ழுறவுவந் தெறி யேமிகு
கருணையொ டிலகுசிங் கார மாகிய—முருகோனே.

ஷை. மெட். வேறு.

சந்தக்குழிப்பு.

தந்தனந் தானதன தந்தனந் தானதன
தந்தனந் தானதன—தந்ததான.

அங்கிணம் போலுமிரு கொங்கையுந் தானிகரி
லங்கஜன் போர்புரியு—மம்புபோலு
மஞ்சனந் தோயுமிரு கண்களுந் தானைமிகு
மம்பரந் தானுறும—ருங்குமாடு
கங்கணந் தாவிருக ரங்களுங் காணவுயர்
கந்தரம்போலிலகு—கொண்டையோடு
கண்டுறும் பாவையர்க டம்பெருங் காதலது
கண்டயங் காமலரு—டந்துகாவாய்
வங்கணந் தானுமுறு தந்தனம் பாடியுமு
வந்துவந் தாடியுற—வுந்தபேய்கள்
வஞ்சகன் சூரனத கம்பிளந் தேவுயிர்ச
மன்பதங் காணவமர்—தந்துதேவர்

தங்கணஞ் சேருதுய ரங்களுந் தீரவரு
டந்துவங் காளநக—ருந்தியேசீர்
தங்குசிங் காரமுரு கன்கடம் பாரமணி
தண்புயன் பாரமரர்—தம்பிரானே.

வேறு.

சந்தக் குழிப்பு.

தந்தான தானதன தானதன தானதன
தந்தான தானதன தானதன தானதன
தந்தான தானதன தானதன தானதன—தனதானா.

மங்காத சாயமுறு தானைகொள்ப ஞர்சுதுயில்
சிங்கார மாகவிடை யேறவைர வோலையிரு
வண்காது மேறசர டோடுகொடி யாரமது—மிடறேற.
வங்காள மாவளையல் காபுகொலு சேறகர
மின்பாரு நாகர்திரு கோடிருமு ஞகுப்ரபை
மஞ்சாரு மோதிதனி லேறவொளிர் ப்லாகுமுக—மதிலேற
தொங்காத மாமுலையை மூடுதுயி லோதுற
கண்காணெ ஞதவிடை யாரநடை யாளுமவர்
துன்பேறு பார்வையத ஞலுமய லாகிநித—முறவாடு
தொந்தரூ மோர்சிறிய தானசுக மீதிலக
முந்தாம லோர்பெரிய தானவுன தோரரிய
துன்பேயி லாதசுக மேவுறவெ ஞளுமரு—டருவாயே.
கங்காள ராறுமுக மாகவதி லாருமன
றங்காக ஞறுமறு மாபொறியை யீயவது
கண்டேத டாகமுற வேசெயவ வாறுமொரு—வடிவான
கந்தாவி சாகருக தோகைமயில் வாகவுமை
மைந்தாசு ரேசகும ரேசபர மேசபல
கண்காணு மாறுமுக வீறசுரர் கோறலுற—வடுதீர
செங்காடு மேருகழு காசலம யூரகிரி
வெண்காடு வேதவன மாடுதுறை மாமதுரை
செந்தூர்வி ராலிமலை யோடுகதிர் காமமது—முறுவேலா
செங்காவி நீர்பரவு வானநதி சூழ்கரைகொள்
வங்காள மாநகரி லேறியழ காகவமர்
சிங்கார மாகுமுரு கேசவென தோர்பெரிய—பெருமாளே.

ஷை வேறு சந்தம்.

தந்தா தனந்த தந்தா தனந்த
தந்தா தனந்த—தனதான.

சங்கே றுசெங்கை கொண்டே கலந்து
சந்தோ டுகொஞ்சி—யுறவாடி
சந்தோ டதம்ப லந்தா னுமண்டு
சம்போ கவண்பு—தவைசெய்
சிங்கா ரமங்கை தம்பா ணிரம்பு
சிந்தா குலங்க—ளறவேயுன்
செந்தா ளிலன்ப கம்பூ ணவென்று
செந்தூர வந்து—மருள்வாயோ
கங்கா ளர்தந்த மைந்தா கடம்ப
கந்தா சிலம்ப—கதிர்வேலா
கங்கே யசம்பு பங்கா ளுமங்கை
கண்டே மகிழ்ந்த—குமரேசா
செங்கா லனங்கொ ணஞ்சை யிலங்கு
செஞ்சோலை தங்கு—கமுகோடு
தெங்கே மிகுந்த வங்கா ளமுந்து
சிங்காரமிஞ்சு—முருகோனே.

இஃது

(தா தா பாய் நௌரோஜி-என்ற மெட்டு)

பல்லவி.

வேல்முருகா—சத்திவடி—வேல்முருகா
வெங்காளத்தமர் சிங்காரத்திரு (வேல்)

அநுபல்லவி.

மால்மருகா முருகா வளங்கொள்குகா ஷண்முகா
மகிமைபெற்றுறு ந்கரப்பெரிய வகமதிற்பெரும்
புகழுறும்வடி (வேல்)

(தொகையறு)

பாலாபி டேக மேலாவ லுற்ற பரனே
பரமன் றனக்கு முபதேசி யான சுரனே
மேலானஞான நூலோது மாறு சிரனே
வேதாதி கட்கு மேலா யிலங்கு வரனே.

சரணம்.

சத்ருசங் காரகர மித்ருவு தாரபர
தண்வயித் தியநா தன்கவிக் குகந்த சண்முக பன்னிரு
கண்க ளுறும்வடி (வேல்)

(பாலாபிஷேக என்ற மெட்டு.)

தெங்கேயு லாவுறு வங்காள மேவுறு சிங்கார
வேல்முரு கேசன் கந்தன்
தேசமெங் கும் புகழ் பேசுறுந் தர்மப்ர
காசஞ்செய்நகர வாசர் சொந்தன்
சிங்கா தனச்சூர சங்காரன் தேவர்பு
ரங்காவல் செய்தசே னதிபதி
தேவானை வள்ளிச மேதன்கல் கத்தாவில்
மேவுங்க டைக்கும்வி லாசபதி

(தொகையறு.)

தேவாதி தேவனருள் சேயே வாவா
திருமால் மருகவெங் தேவே வாவா
காவாதி ஞானக் கனியே வாவா
கந்தாகு காவென் கண்முன் வாவா

(பல்லவி பாக்கி.)

செயிரறு முகபர சிவகுரு வருக
மயிலினொருமுதுகி னுறவெதிர் வருக
வயிலது காமதி லழகுற வருக
பயிறரு தமிழுறு பரமனே வருக
வானப்ர காசன்
ஞானக்கு கேசன்
வயித்திய நாதன் வணங்குறு நேசன் (தெங்)

(அலங்காரம் அலங்காரம் என்ற மெட்டு)

பல்லவி.

வங்காளச் சிங்கார
மாமுருகா மால்மருகா (வங்)

அநுபல்லவி.

கங்கா நதிக்கரையாம் தெங்காருஞ் சோலைகளாம்
கந்தாபங் குணியுத்திரம் வந்தேற நீ வருவாய்
கானக் குறவள்ளி தெய்வானை
தானற்புத மள்ளி யிருபுறந்
தானிருக்க வுள்ளி (வங்)

சரணம்,

தங்கமயி லேறுமுருகா சங்கரன ருள்சண்முகா
சந்தோட மாகவெளி வந்தேவி ளங்கவொளி
தங்குறுஞ் சோதி கொண்டி
லங்குறு வீதி புகழ்
பொங்குற நீதி (வங்)

நாட்டு நகரப்பெரிய வீட்டினிலே வாழுரிய
ஞானவடி வேல்கொள்பர கானவள்ளி யணையுங்கா
சத்ருசங் கார நல்ல
மித்ருவு தாரா கவிச்
சித்ர வொய்யாரா (வங்)

அம்பிகை யருள்குமரா நம்பினவற் கருளமரா
அன்பார் வயித்ய நாத னின்பாவுரைத்த கீத
மார்ந்தவிப் பாட்டு வுல
கோர்ந்துறக் கேட்டுச் சொலச்
சேர்ந்தருள் கூட்டு. (வங்)

உ

சிவமயம்.

இஃது

கும்பாபிஷேக வாழ்த்துக் கவி.

முப்பத்திரண்டடியான் மிகுத்துவந்த

எழுசீராசிரிய விருத்தம்.

முதலடி.

சீரிற் சிறந்தநக ரேரிற் றிகழ்ந்தநகர்
தெய்வங்கள் பொங்கு நகர்மா
சேணுற்ற சோலைநகர் காணுற்ற வேலைநகர்
சிவகெங்கை யுற்ற நகர்நெற்
செஞ்சாலி வயல்கொணகர் மஞ்சாரு புரிசைநகர்
சிவன்வாழு நகர்வி ளேடித்
தேடும்பல் மாடங்கள் கூடங்கள் பீடங்கள்
சேர்ந்த மான நகர்சீர்
திகழ்வியா பாரமது புகழதே றச்செயச்
சிறந்தநக ரிந்தி யாவாந்
தேசமித னுக்குமொரி ராசதா னியதாய்த்
திகழ்ந்துறு வளங்கொ ணகரேர்
செப்பரிய நகருவமை யொப்பரிய நகரெந்த
தேய்த்து முரைகொ ணகரிச்
சிங்கார நகராகும் வங்காளமெனுமொர்செந்
திருமகட் குற்ற நகரில்

(இரண்டாமடி.)

பாரிற் சிறந்ததமி ழூரிற் பிறங்குமொரு
பாண்டிநா டுற்ற தாமொன்
பதுபத்தொ டாறுசேர் பதியுற்ற தனிகர்சிவ
பக்திமிகு சுத்த ரறமே

பண்ணுறும னத்தர்பர னண்ணுறு தலந்தொறும்
பரவியாங் கவற் காலயப்
பணிமுதன டாத்திநல் லணிபெறச் செய்பவர்
பாரிலுறு காசி முதலாம்
பலதலந் தொறுமறம் பலவித முறச்செயும்
பண்பர்நற் சிந்தை பெற்ரோர்
பகரரிய புகழியற் பகைகுலத் தோர்தமிழ்
படித்தவரை யாதரிப்போர்
பக்ஷமொடு பூதிபஞ் சக்ஷரங் கண்டிநற்
பத்திமிக வுற்ற செல்வர்
பரசமிக வுறுநகர வாசிக ளெனப்பெயர் .
படைத்த குல வணிக திலகர்

(மூன்றுமடி.)

ஏரிற் சிறந்திலகு பாரிற் பிறங்குகண்
ணெதிர்காணு றுங்கடவுளா
மேறுமயி லேறுதக ஞறுமுக ளேர்முருக
னெமதுகந் தன்கடம்ப
னேதிலரு தேவர்சே ஞதிபதி யானைமுக
னிளையன் வேலன்சி லம்ப
னேசில்சிங் காரமுரு கேசனக மகிழ்வோ
டிருந்தருள் செயற்கோர் புக
ழேறுமெஜ ராவீதி பேறுபெறவேமிக
விளங்குநக ரப்பெரிய வீ
டென்னுமுப் மத்திநான் கென்னுமுறை செப்புமனை
பேற்றதொரு நல்லாலய
வெழிற்பணிகள் செய்தது விழுப்பமுற யாவரு
மியம்பவோர் புனித மாகு
மிலக்கண முறுந்தன விலக்குமி விலாசமென்
றெழிற்பெயரு மீந்த தற்கே.

(நான்காமடி)

வீரிற் சிறந்தகட் டேறிப் பிறங்கு பல்
வாத்தியங்களுமு ழங்க

மறையவர்க ளொருபுறம் மறைபுகல யக்யமொரு
மருங்கினில் வளர்க்க நற்றே

வீரமொடு பண்கள்திரு வாசகமு மொருபுறம்
வழங்கநற் றானம் பல

மதியொடுற நல்லதுன் மதிவருட மாதுலா
மதிகொள்பதி னேழு திகதி

வாரமது புதனுக னேரமது முறுகாலை
வளரேழ ரைக்கு மேலே

வரும்பத்தொ டொன்றரை தரும்நாழி கைதனுசு
வந்தசுப நேரத்திலே

மாதவர்கள் யோகியர்கள் மாமறையர் நூலறிஞர்
வாழ்த்தரும் பாபி டேகம்

வழங்கினர்கள் சீர்மிக முழங்கவே யென்னாளும்
வாழ்கமிக வாழ்க மாதோ.

முற்றிற்று.

சிவமயம்.

சீட்டுக்கவி.

நேரிசை யாசிரியப்பா.

திருவளர் செல்வப் பெருவள மோங்கித்
திகழுந் தேவை நகரில் வாழுஞ்
சீமான் கல்விப் பூமான் வணிக
குலமுயர் மணியென நலமுறு சேயன்
சீருறு சிறுகுளத் தூருடை யான்குலச்
செயிரறு மாமணி வயிரவன் கோயி
னண்ணுறு வம்சக் கண்ணப்ப னீன்ற
புத்திர னல்ல மித்திர னுருவன்
கல்கத் தாவிற் செல்வத் தானுயர்
பெறுமே னுவகை யுறுமோர் சோம
சுந்தர வள்ளலு வந்துறு மதிபதி
யாக வமர்ந்துறு யோக முறுந்தவன்
வங்கா ளத்தமர் சிங்கா ரப்பெரு
முருகே சனேயே யொருகா தலினால்
முருகா முருகா முருகா வென்றே
யுருகா மனமு முருகா வுருக
வோதி வாழுறு நீதன் சாமி
நாத னெனப்பே ரோதுறு வள்ளல்
கண்டு மகிழ்ச்சியை யுண்டிட வேசீர்
கொள்ளு மகத்தியன் பள்ளியில் வாழ்வோன்
செந்தமிழ் கற்றுசி றந்துறு தீரன்
புவியோர் புகழும் கவியா யிலகுவ
ணெண்ணுறு முன்கவி பண்ணுறு சூரன்
மண்ணற் முதற்பல நன்னிதி யுற்ற
சமீன்தொறு மேமிக வமீனுட னேகி
யெ.ல்லை யுறும்பல சால்வைகள் சருகைத்
துப்பட் டாக்களு மிப்பட் டாங்கினில்
கற்கள் பதித்து விற்கொள் மோதிரஞ்
சங்கிலி முதற்பல தங்க வணிகளுஞ்
சம்மா னமதா யிம்மா நிலத்திற்

பெற்ற பாரதி யுற்ற பெயருஞ்
சகத்தோர் மெச்சும் வயித்தியநாத
சருமா வென்றே யருமா புகழைக்
கொண்ட யானே விண்டிடு மாற்றமு
மென்னே வெனிலென் னன்னேய னாகும்
பூமி மெச்சுறுஞ் சாமி நாதனை
யுன்மன முவந்தன் றென்முன முரைத்த
படியே முருகனடியிணை போற்றித்
துதிபல வுறவோர் பதிகமு நல்ல
வண்ண முறப்புகழ் வண்ணமு மோதிச்
சந்த முறச்சில் சிந்து முறைத்துத்
தந்தனன் யானே கந்த னுவப்ப
வன்புறு நீயு மின்புற விவ்வணை
புவியோர் புகழக் கவிக ளியற்றித்
தந்தசர் மாவுஞ் சந்தோ டங்கொள
வங்காள மேவுஞ் சிங்கார முருகன்
றன்மேற் பாடிய வன்மா கவிக்குப்
பூமியோர் மெச்சுஞ் சாமி நாத
னடையாள மான கொடையா யளித்ததென்
றணியாய்த் தங்க வணியாப் பற்பல
கற்கள் பதித்து விற்கொளச் செய்தெற்
களிப்பாய் கண்டவர் களிப்பேயடைய
மற்று மென்னையே பற்றுந் தருமக்
கழகந் தனக்கு னழகுறு நிதியு
மூற்றாகவூற நூற்றுக் கணக்கா
யுதவி யருஞ்சந் ததியுமோ ராண்டிற்
பெற்றுநற் சீரும் பெற்று
வாழி வாழிநீ டூழி வாழியே.

சுபம்! சுபம்!! சுபம்!!!

இங்ஙனம்,

இ. ராம. வயித்தியநாத சர்மா,

அகத்தியான்பள்ளி.